Registered as a News paper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 1 6 1985 சனிக்கிழமை (வைகாசி 19 றம்ழான் 11) முழக்கம் 116

## கருணாநிதி மீண்டும் கைது!

தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள கழகத்தின் கட்சிக்காரியாலயத்தை காலி செய்ய மறுத்ததால் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டார். தலைவர் கருணாநிதியுடன், கழகப் பொதுச் செயலாளர் திரு. க. அன்பழகன் லோக்சபா உறுப்பினர்களான முரசொலிமாறன், எம். வி. எம். சோமு, எல். கணேசன், பன்னிரெண்டு சட்டசபை மற்றும் மேல்சபை உறுப்பினர்களும் சுமார் நூறு கழகத் தொண்டர்களும் கைதானார்கள். அரசினர் தோட்டத்தில் உள்ள தி. மு. க. வின் கட்சிக் காரியாலயத்தை நேற்றுக் காலை பத்து மணியுடன் காலிசெய்துவிட்டு கட்சிக்குக் கொடுக்கப்படும் வேறு இடத்திற்கு காரியாலயத்தை மாற்ற வேண்டும் என்று சட்டப்பேரவைச் செயலாளரின் உத்தரவை அமுல் செய்ய மறுத்ததால் இவர்கள் கைதானார்கள்.

★ இனப் பிரச்சினைக்கு ஜனாதிபதி கூறும் ஆலோசனை என்ன? ★ பொதுதேர்தல்மூலம் தமது யோசனைகளை அறிவிக்க வேண்டும் ★ பொதுமக்கள் அங்கீகாரம் வழங்க தவறுவார்களானல்

# ஜனாதிபதியின் எந்த முடிவையும் எதிர்ப்பேன் என்கிறார் ஸ்ரீமாவோ

## சர்வஜன வாக்கெடுப்பை எவ்வேளையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாதெனவும் அறிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன தீர்மானிக்கும் எந்த ஆலோசனையும், பொது மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம், அவர்கள் முன்னால் வைக்கப்பட வேண்டுமென்றும், மக்கள் அதனை அங்கீகரிக்கத் தவறினால் தனது கட்சி இறுதிவரை அதனை எதிர்த்தே தீருமென்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு தம்மைச் சந்தித்துப் பேசிய பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியிடம் அவர் இதனைத் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது: "அரசாங்கம் எடுக்கும் எந்த

– 4ஆம் பக்கம் பார்க்க

## 25 'பரல்' டீசல் கொள்ளை

## பஸ் சேவைகள ரத்து!

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்கென நேற்று வவுனியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட இருபத்தைந்து 'பரல்' டீசல் இடைவழியில் இனம் தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் ஓமந்தைக்கும் புளியங்குளத்துக்குமிடையில் இச்சம்பவம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. டீசலுடன் சேர்த்து, அதனைக் கொண்டு வந்த பஸ்ஸும் கடத்திச் செல்லப்பட்டதாயினும், பட்டரி கழற்றப்பட்ட நிலையில் பஸ் பின்னர் அனுதரவாக விடப்பட்டிருந்தது.

குடாநாட்டு பஸ்சேவைக்கு ஒரு துளி டீசல்கூட இல்லாததால், யாழ்ப்பாணம் அரசா

-4ஆம் பக்கம் பார்க்க

## மூதூர் சடலங்கள்

மூதூர் பகுதியிலிருந்து நான்கு சடலங்கள் நேற்று திருமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டன. மேலும் பல சடலங்கள் மூதூரில் இருப்பதாக தெரிய வந்துள்ளது. இருதினங்களுக்கு முன்னர் இங்கு இடம்பெற்ற கொலைகள் தொடர்பாக தாக்குதல் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

## லலித், எஸ்மண்ட், ராஜபக்ஷ சகிதம் டில்லிக்கு

# ஜனாதிபதி இன்று பயணம்!

## ராஜீவுடன் பங்களாதேஷுக்கும் செல்வார்

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்வதற்கான உச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தன இன்று மாலை புதுடில்லி பயணமாகின்றார்.

—4—ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டனிடம் கோரிக்கை

## தமிழரைப் பலவந்தமாக திருப்பி அனுப்பக்கூடாது!

(லண்டன்)

பிரிட்டன் செல்பவர்கள் விசா பெறவேண்டும் என்ற திட்டம் அமுலாகுமுன் நேற்று முன்தினம் ஐம்பது இலங்கைத் தமிழர்கள் லண்டன் வந்து சேர்ந்துள்ளதாக 'லண்டன் டைம்ஸ்' நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

திரும்பிச் செல்லவிரும்பாத தமிழ் அகதிகளை பலவந்தமாகத் திருப்பியனுப்ப வேண்டாம் என சர்வதேசமன்னிப்பு ஸ்தாபனம் பிரிட்டிஷ் அரசைக் கேட்டுள்ளது.

இதேவேளையில் பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் ஜனநாயகக் கட்சியின் தலைவர் இலங்கையில் நிலைமை சீராகும் வரை

—4ஆம் பக்கம் பார்க்க

## ராஜீவ் அழைப்பை அனுரா ஏற்றார்; மாத இறுதியில் டில்லிக்கு விஜயம்!

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இந்தியா வருமாறு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தமக்கு விடுத்துள்ள அழைப்பைத் தாம் ஏற்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு: அனுரா பண்டாரநாயக்கா நேற்று 'ஈழமுரசு'க்குத் தெரிவித்தார்.

இம்மாதம் 29ம்திகதி பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரி, எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்து பிரதமர் ராஜீவ் காந்தியின் அழைப்புக் கடிதத்தைக் கையளித்தார்.

பிரதமர் ராஜீவ்காந்தி தமது அமெரிக்க விஜயத்தை முடித்

—4—ஆம் பக்கம் பார்க்க

## பேச்சுக்களில் உதவுவதற்கு டிக்ஸிற் டில்லி விரைந்தார்

இலங்கையின் இந்தியாவிற்கான தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்றுக் காலை புதுடில்லி சென்றார்.

பிரதமர் ராஜீவ் காந்தி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நாளை நடத்தவிருக்கும் பேச்சு வார்த்தைகளில் உடனிருந்து உதவுவதற்காக இவர் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 27-ம் திகதி இந்தியாவிலிருந்து இங்கு வந்து புதிய பாரதத் தூதுவராக பதவியேற்ற திரு. டிக்ஸிற், 28-ம் திகதி முதல் நேற்று முன்தினம் 30-ம் திகதி வரை திரு. ரமேஷ் பண்டாரியுடன் முக்கிய பேச்சு வார்த்தைகளில் பங்கு கொண்டார்.

புதிய பதவியை ஏற்று ஐந்தாம் நாளே இவர் தாயகம் செல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

## கொழும்பு பஸ் குடைசாய்ந்தது

நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்பட்ட தனியார் பஸ் ஒன்று, இரவு

—4ஆம் பக்கம் பார்க்க

## மாலைச்செய்தி நேர மாற்றம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மாலைத் தமிழ்ச் செய்தியறிக்கை இன்று முதல் மாலை ஆறு மணிக்கு ஒலிபரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடபகுதி டி.ஐ.ஜி. இனிமேல் கொழும்பிலிருந்து கடமை

யாழ்ப்பாணத்தில் இருந்து இதுவரை இயங்கி வந்த வட பிரதேச பிரதி பொலிஸ் மா அதிபர் இன்று முதல் கொழும்பிலிருந்து கடமையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் வட பிரதேச டி. ஐ. ஜி. அலுவலகம் தொடர்ந்து இயங்கலாமெனத் தெரியவந்துள்ளது.

ஏப்ரல் மாதம் நடைபெற்ற குண்டுத் தாக்குதலால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய முகப்பிலிருந்த டி. ஐ. ஜி. அலுவலகம் முற்றாகத் தகர்ந்தது தெரிந்ததே.

## ஜனாதிபதி: 'பயங்கரவாத வன்செயல்களை ஒழிப்பதற்கு எனது இந்திய விஜயம் உதவும்!'

(கொழும்பு)

இந்தியாவிற்கான தனது விஜயம் இரு நாடுகளிலும் பயங்கரவாதச் செயல்களையும், வன்செயல்களையும் ஒழித்துக்கட்டுவதற்கு உதவும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்

ஜோன் டி. சில்வா அரங்கில் அரசாங்க சேவை தட்டெழுத்தாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறிய ஜனாதிபதி உலகெங்கும் தோன்றியுள்ள பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட சர்வதேச சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான ஒரு சபை அமைப்பது பற்றி இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் தான் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும். இந்த அமைப்பின்

– 4ஆம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

ஓய்வு பெற்ற ஆசிரியர் தம்பையா பேச்சு:

# யாழ் இந்துவில் கல்வி கற்பித்தமையினால் எனது அறிவும் வளரக்கூடியதாக இருந்தது

"யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தையும், அக்காலத்தையும் எனக்குக் கிடைத்த பெரும் பேருகக் கருதுகின்றேன்'' என்று யாழ் இந்துக் கல்லூரியில் தன் முப்பத்தொரு ஆண்டுக் கல்விச் சேவையில் கடைசிப் பன்னிரண்டாண்டுகளைக் கல்வி கற்பிப்பதற்கு அர்ப்பணித்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர் வ. தம்பையா தமக்களிக்கப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவில் பதிலுரை வழங்கும் போது குறிப்பிட்டார்.



அவர் மேலும் தமது உரையில், யாழ். இந்துக்கல்லூரியில் சேவையாற்றும் வாய்ப்பு கிடைப்பது மிகவும் அரிது. அவ்வாறு வாய்ப்புக் கிட்டினாலும் நிறம்படக் கடமையாற்றுவது கடினம். ஏனெனில் இங்கு தெரிந்தெடுக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களே கடமைக்கு அமர்த்தப் படுகின்றனர். இதனால் கற்றவர்களின் அறிவைக்கூட மேலும் அபிவிருத்தி செய்யக் கூடிய சூழலை இக்கல்லூரி உருவாக்கிக் கொடுத்து வருகின்றது.

என் அறிவு கூட இங்கு கற்பித்ததன்பயனுகப் பன்மடங்கு வளர்ந்தது என்று கூற ஆசைப் படுகின்றேன் என்றார். விழாவிற்கு கழகத்தலைவர் பொ. நா. நல்லையா தலைமை வகித்தார்.

கல்லூரி உப அதிபர் க. சிவராமலிங்கம், சு. புண்ணியலிங்கம் பண்டிதர் க. கணபதிப்பிள்ளை, எஸ். கணேஷரத்தினம் முதலியோரும் பாராட்டுரை வழங்கினர்.

கழகம் இளைப்பாறும் ஆசிரியர் தம்மைமா அவர்களுக்கு மதிய போசன விருந்தளித்துக் கௌரவித்ததுடன் அன்பளிப்பும் அளித்து மகிழ்வித்தது. கழகச் செயலாளர் பி. சிறீஸ்கந்தராசா நன்றி தெரிவித்தார்.

## கந்தபுராண படல படிப்பு

(புலோலி)

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம் விநாயகராலயத்தில் கந்தபுராண படல படிப்பு ஆரம்பமாகியுள்ளது.

சித்திரா பூரணை தினத்தன்று ஆரம்பமான இக்கந்தபுராண படல படிப்பு மூன்று மாதங்களுக்கு நடைபெற்று ''திருக்கல்யாணப் படிப்பு'' விழாவுடன் பூர்த்தியடையும். திரு. க. சிதம்பரப்பிள்ளை கந்தபுராணப் படிப்பின் முக்கியஸ்தராகப் பணிபுரிந்து வருகின்றார்.




✼ அரியாலை குகன் வீதி, மாணிக்கராசா சீதாதேவி தம்பதிகளின் மகன் தபோதரன் இன்று தனது மூன்ருவது பிறந்தநாளைக் கொண்டாடுருர்.

✼ பாஷையூர் செலஸ்ரின் சாந்தி தம்பதிகளின் மகள் ஷயந்தினி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டடுகிருர்.

✼ அளவெட்டி கணேஸ்வரம் நீலகண்ட ஐயர் சரோஜா தம்பதிகளின் மகன் விமலேந்திரன் இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✼ கிளிநொச்சி, திருவையாறு குலரத்தினம் செல்வமலர் தம்பதிகளுன் மகன் குலேந்திரன் இன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✼ அரியாலை, புங்கன்குளம் பிரகலாதன் புவனேஸ்வரி தம்பதிகளின் மகன் செந்தில்குமரன் இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✼ திருநெல்வேலி இரத்தினசிங்கம் சந்திரா தம்பதிகளின் மகன் மதன் இன்று தனது ஆருவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✼ பென்ரிக்கோஸ் லேன் சுந்தரம்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் மகள் இராசலட்சுமி இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

## இவர்களுக்கும் நஷ்டஈடு

கடமை நேரத்தில் அரசாங்க, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் கொல்லப்பட்டால் அல்லது அங்கவீனமடைந்தால் அவர்களுக்கு, அல்லது அவர்களைச் சார்ந்திருப்போருக்கு விசேஷ நட்டஈடு வழங்கும் திட்டத்தை அமைச்சரவை நேற்று அங்கீகரித்துள்ளது.



பருத்தித்துறையில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இலங்கை சைவ மன்றத்தின் வேதாகம திருமுறைப் பாடசாலை, சைவ நூல் நிலையம் திறப்பு விழாவை குகன் ஸ்ருடியோ உரிமையாளர் திரு. அ. நாகரத்தினம் (குகன்), திருமதி. சின்னம்மா நாகரத்தினம் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் பண்டிதர் கே. கிருஷ்ணபிள்ளை, மூன்னள் புலோலி கிழக்கு கிராமோதய சபைத் தலைவர், திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம், பிரம்மஸ்ரீ பஞ்சநாதக் குருக்கள் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (படம்: சிவகுமாரன்)





வாழ்நாள் முழுவதும் பயன்படும் முதலீடு நாளையல்ல இன்றே தீர்மானியுங்கள்

டைகில் என்ஜினியரிங் லிமிற்றெட்
43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்

Eurolanka Travels Ltd.

40, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு: யாழ். பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு அருகாமையில் உள்ள வீதியில்)

பேர்லின் சேவை

பாங்கொக் (BANGKOK) ஊடாக AEROFLOT விமானத்தில் விசேஷ சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது:

(i) ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் பயணம் செய்யலாம்.

(ii) யூன் (June) 10, 17 ஆம் திகதிகளில் பயணம் மேற்கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும்.

கட்டணம்: ரூபா 15,500/-

(iii) பேர்லின் போகும் பிரயாணிகளுடன் எமது பிரதிநிதி ஒருவர் எமது தலைமைக் காரியாலயத்தில் இருந்து பாங்கொக் (BANGKOK) வரையும்சென்று AEROFLOT இல் பயணம் அனுப்பும் வரை எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பார்.

காசோலைகள் (Travellers Cheques) இலவசமாக எல்லா நாடுகளுக்கும் எடுத்துக் கொடுக்கப்படும் ஏனைய பிறநாடுகளுக்கு செல்ல விரும்புவோருக்கும் ஆசனப்பதிவுகளும் டிக்கட்டுக்களும் செய்து கொடுக்கப்படும்.

தலைமை அலுவலகம்:

EUROLANKA TRAVELS LTD.
6A, DAISY VILLA AVENUE,
COLOMBO - 4.
தொலைபேசி: 585990, 589992
(குறிப்பு: பம்பலப்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக)
கிளை
INTERLINK TRAVEL (LANKA) LTD.
37, QUEEN STREET,
COLOMBO-1
தொலைபேசி: 547131, 547132.

வரி விளம்பரம்

மாபெரும் ஏல விற்பனை

இன்றும் நாளையும் காலையிலிருந்து யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுச் சந்தைக் கட்டிடத்தில் ஏராளமான பாவனைப் பொருட்கள். விபரங்களுக்கு: ஏல விற்பனை நிலையம் கோப்பாய்.

கோப்பாய் சந்திக்கருகாமையில் கடைகள் வாடகைக்கிருக்கின்றன. விபரங்களுக்கு: ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

விற்பனைக்கு

நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் (School Lane) 19 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். திருமதி வின்சன் 7, இராசாவின் தோட்ட லேன் யாழ்ப்பாணம்.

பங்காளர் தேவை

யாழ். நகருக்கு 5 மைல் தூரத்தில் பாதுகாப்பான சூழலில் நன்ருக வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஸ்தாபனத்துக்கு முதலீடு செய்யக் கூடிய பங்காளிகள் தேவை விள. இல. 448 மே/பா ஈழமுரசு, 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

முள்ளியவளை தண்ணீரூற்று பழைய எரிபொருள் நிலையத்திற்கருகில் நல்ல வியாபாரம் நடைபெற்ற கடை தளபாடப் பொருட்களுடன் விற்பனைக்கு அல்லது கொமிசனுக்கும், முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கருகில் வீட்டிற்கு அத்திவாரம் இடப்பட்ட ஏழு பரப்புக் காணி விற்பனைக்கும் உண்டு. தொடர்பு: த. பரம்சோதிநாதன், கைதடி நுணுவில், சாவகச்சேரி.


## 31வது நாள் நினைவாஞ்சலி



சுப்பையா சுந்தரம்பிள்ளை

மலர்வு: 1902-19-10 உதிர்வு: 1985-05-02

குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் தெய்வமே எம்மையெல்லாம் ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டு தெய்வத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட அன்பு ஜோதியே நீங்கள் மறைந்து இன்று 31 நாட்கள் ஆயினும் நீங்கள் வாழ்ந்த காலத்தை மறக்க முடியாமல் தவிக்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

49, பென்ரிகோஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

அன்பு மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள்

### உதய சிந்தனை

பெரும்பான்மையோரின் வோட்டுக்களால் பரிகாரத்தைச் செய்ய முடியாது. ஏகமனதாக ஒற்றுமை ஏற்பட்டால்தான் நாட்டில் ஒற்றுமை கைகூடும்.

-- நேருஜீ

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

1-6-1985 சனிக்கிழமை (குரோதன வைகாசி 19)

# 1985 பொசன் திருநாள் வரலாற்றில் பதியுமா?

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த இலங்கை-இந்திய தலைவர்களுக்கிடையிலான உச்சி மகாநாடு நாளை நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரதத்தின் தலைநகரான டில்லியில் இருநாட்டுத் தலைவர்களும் சந்திப்பார்கள் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு பாரதம் திரும்பிய வெளியுறவுச் செயலர் ரமேஷ் பண்டாரி, தமது பேச்சுவார்த்தையின் பலாபலன்களை பிரதமர் ராஜீவ் காந்தி, வெளியுறவுக் கொள்கைக் குழுத் தலைவர் ஜி பார்த்தசாரதி, வெளியுறவு இணையமைச்சர் குர்ஷித் ஆலம்கான் ஆகியோரிடம் தெரிவித்த பின்னரே ஜே. ஆர். - ராஜீவ் உச்சி மகாநாடு நிச்சயம் செய்யப்பட்டது.

இந்த வகையில் ஜனாதிபதி முன்வைத்திருக்கும் உத்தேச ஆலோசனைகள் ஓரளவுக்கு பாரதத்தை நம்பிக்கை கொள்ளச் செய்திருக்கின்றன என்று எண்ண இடமளிக்கிறது.

அமெரிக்க விஜயத்துக்கு முன்னர் உச்சி மகாநாடு நடைபெறவேண்டுமென்ற இலங்கையின் நிலை, ராஜீவின் போக்கினால் எந்தவொரு நஷ்டமும் இலங்கைக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதாகவே, அரசியல் அவதானிகளால் கருதப்படுகின்றது.

அதேவேளையில் உச்சி மகாநாடும் கூட வெறுமனே பேச்சுவார்த்தையாக அமைந்து, ராஜீவின் அமெரிக்க விஜயத்தின் பின்னர் பிசுபிசுத்து விடுமோ என்ற ஐயமும் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வருவதையும் நாம் குறிப்பிட விரும்புகின்றோம்.

1956ம் ஆண்டிலிருந்து பதவிக்கு வந்த அரசாங்கங்களுடன், தமிழ்க் கட்சிகளும் தமிழர் தலைவர்களும் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளும, எழுதிக் கிழிக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட ஒப்பந்தங்களும் தற்போதைய பேச்சுக்களில் தமிழ் மக்கள் அவநம்பிக்கை கொள்ளவைப்பதில் தவறில்லை எனலாம்.

தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்கப்படுமா? அல்லது சலுகை வழங்கப்படுமா? என்பது உடனடியாகச் சொல்ல முடியாதது.

ஆனால் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வை உடனடியாகக் காணவேண்டுமென்பதில் இன்று நாடு முழுவதுமே ஒன்றுபட்டுள்ளது.

சிங்கள அரசியல் கட்சிகள், பௌத்த பீடாதிபதிகள், முக்கிய பிரமுகர்கள் அனைவருமே ஒன்றுபட்டு கோஷமெழுப்பத் தொடங்கியுள்ளனர்.

'அரசியல் தீர்வு' என்பது வெறுமனே கடதாசி ஒப்பந்தமாக அமைந்து விடமுடியாத ஒரு விஷயமாகும். பெரும்பான்மை மக்களிடையேயும், சிறுபான்மை மக்களிடையேயும் நிரந்தரமான மனமாற்றத்தை ஏற்படுத்த இது வழிவகுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டு, பழிவாங்கப்பட்டு, படுகொலைக்குள்ளாக்கப்பட்டு வரும் தமிழினம் எதனையும் பயந்து பயந்து சந்தேகத்துடன் பார்ப்பதை எவரும் தவறென்று கருத முடியாது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது, அரசியலமைப்பின் ஆறுவது ஷரத்தை வாபஸ் பெறுவது, ஆயுதப் படைகளை தமிழ் பிரதேசங்களில் இல்லாதிருக்கச் செய்வது மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது என்ற நான்கு நல்ல ஆலோசனைகளை மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்துள்ளது.

இவைகளை உடனடியாக அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வருமானால், சுமுகமான அரசியல் தீர்வுக்கும் வழிபிறக்க இடமுண்டு.

ஜனாதிபதியின் சரித்திரப் புகழ்மிக்க இன்றைய இந்திய விஜயம் இவைகளுக்கெல்லாம் சரியான விடையைக் காணவேண்டும்.

இலங்கைக்கு பௌத்த மதத்தைக் கொண்டுவந்த புத்த பெருமான் அவதரித்த பாரத மண்ணில், பௌத்த மக்களின் மிகச் சிறப்பு வாய்ந்த தினங்களில் ஒன்றான பொசன் பண்டிகைத் திருநாளில் நடைபெறும உச்சிமகாநாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண, அதி உத்தம ஜனாதிபதி முயலுவார் என நம்புவோம்.

இந்துக்களின் சிறப்புத் தினமான விசாகப் பெருநாளாகிய இன்று பாரதம் சென்று, போயாவுககு அடுத்த நாள் அவர் நாடு திரும்பும்போது, தமிழர் அகத்திலும் முகத்திலும் மலர்ச்சி காணப்படவேண்டும் என்பதே அனைவரதும் அவா.

# அணு ஆயுதப் பரிகரணம்; சந்திப்பில் முன்னேற்றம்?

(ஜெனீவா)

அணு ஆயுதப் பரிகரணம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஜெனீவாவில் மீண்டும் ஆரம்பமானபோது பலதரப்பட்ட விடயங்களும் விரிவாக ஆராயப்பட்டன என்று ஜெனீவா அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எந்தவொரு நடவடிக்கையும் பேச்சளவில் அன்றி செயல்வடிவம் பெறவேண்டும் என்பதில் இருதரப்பினருமே ஆர்வம் காட்டினர் எனத் தெரிவிக்கப்பட்டது கடந்த காலம் போலன்றி இத்தடவை ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அரசியல் வட்டாரங்கள் கூறின. விண்வெளியில் ஆயுதபாவனை என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டை சோவியத் யூனியன் வன்மையாகத் தொடர்ந்தும் எதிர்த்தது, எனினும் அமெரிக்கப் பிரதிநிதி இது விடயத்தில் தன் நிலைப்பாட்டிலிருந்து விலகியதாகத் தோன்றவில்லை என்றும் அறிக்கைகள் தெரிவித்தன.

அணுஆயுதப் பரிகரணம் தொடர்பான இரு வல்லரசுகளினதும் தற்போதைய நிலைப்பாடானது உலகில் ஆயுதப் போட்டா போட்டியைக் குறைக்கும் விடயத்தில் தக்க பலனை அளிக்கும் என சர்வதேச ரீதியான நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் அல்லது அக்டோபரில் சோவியத் யூனியன் ஜனாதிபதி திரு. கொர்பசெவ்வைத்தான் சந்திக்க முடியும் என்ற நம்பிக்கையை அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்ட் ரீகன் கொண்டிருக்கிறார்.

எவ்வகையிலும் வருட இறுதியில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் இரு வல்லரசுகளினதும் தலைவர்கள் சந்திப்பது சாத்தியமே என நம்பப்படுகிறது

### இஸ்ரேல் மந்திரி அறிவிப்பு:

## பாலஸ்தீன விடுதலை இயக்க சந்திப்பு சாத்தியமில்லை

(டெல் அவிவ்)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியமில்லை என்று இஸ்ரேலிய பாதுகாப்பு மந்திரி கூறியுள்ளார்.

பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினால் அது சுதந்திர பாலஸ்தீன ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டதாக அமைந்துவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 34 பேர் பலி

(லண்டன்)

ஸ்பெயினில் நிகழ்ந்த அசம்பாவித சம்பவம் ஒன்றில் முப்பத்து நான்கு பேர் இறந்தனர் என அறிவிக்கப்படுகிறது.

## கைதிகள் தப்பினர்

(ஜகார்த்தா)

ஜகார்த்தா சிறைச்சாலை ஒன்றிலிருந்து முப்பத்து இரண்டு கைதிகள் தப்பித்துக் கொண்டதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## திசைமாறிய தமிழக மீனவர்; விடுவிக்க வேண்டுகோள்

(புதுடில்லி)

தமிழகத்திலிருந்து இலங்கையின் வடகரைக்குத் திசைமாறி வந்த ஐந்து மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு பாரதம் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவர்கள் பற்றிய தகவல் யாழ்ப்பாணத்தில் இருந்து பாரதத் தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## ஆலம்கான், ஜி. பி. யிடம் பண்டாரி நிலை விளக்கினார்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்தனா மற்றும் தலைவர்களுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தை விவரங்களை பாரத வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி வெளிவிவகாரக் கொள்கை வகுக்கும் கமிட்டித் தலைவர் திரு ஜி பார்த்தசாரதி, வெளிவிவகார இணையமைச்சர் திரு. குர்ஷித் ஆலம்கான் ஆகியோரிடம் விரிவாக விளக்கினார்.

முன்னதாகப் பிரதம மந்திரி திரு.ராஜீவ் காந்தியிடம் அவர் தனது பேச்சுவார்த்தை விவரங்களை விளக்கியிருந்தார்.

## கதர் உற்பத்தி

(சென்னை)

இவ்வருடத்தில் தமிழ்நாடு நூற்று முப்பது கோடி ரூபா பெறுமதியுள்ள கதர்த்துணியைத் தயாரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாப்பிள்ளை ஊறணியில் அகதி வீடமைப்பு

(தூத்துக்குடி)

தூத்துக்குடி மாப்பிள்ளை ஊறணியில் இலங்கை அகதிகளுக்கென பத்து இலட்சம் ருபா செலவில் நூறு வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இத்தகவலை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் வெளியிட்டார்

மேலும் தொள்ளாயிரம் வீடுகள் கட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கான பகுதிகளை ஆந்திராவிலிருந்து வந்த பொறியியலாளர் குழுவினர் பார்வையிட்டனர்.

மத்திய ஆய்வுக் குழு ஒன்றும் இப்பகுதிக்கு விஜயம் செய்தது.

## டமாஸ்கஸ் சந்திப்பால் அனுகூல நிலை என தகவல்

(லண்டன்)

பத்துவருடங்களாக நீடித்து வரும் லெபனான் யுத்த நிலை குறித்து ஆராயும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் அவசரக் கூட்டம் இன்று நடைபெறுகிறது

இதற்கிடையில் லெபனான் ஜனாதிபதி ஜமாயிலுக்கும் சிரிய அதிபர் அஸாத்துக்கும் இடையிலான சந்திப்பு பயனுள்ள வகையில் அமைந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது

டமாஸ்கஸில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

## 174 தொண்டர் விடுதலை

(சென்னை)

அகில இந்திய வானொலி நிலையம் முன்பாக சென்ற மாதம் 29 ம் திகதி மறியல் செய்ய முயன்றபோது கைது செய்யப்பட்ட தி. மு. க. வின் பெண்கள் அணியின் செயலாளர் திருமதி சற்குணம் உட்பட 174 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## எம்மதமும் சம்மதம் என்ற மனப்பான்மை அவசியம்

(சென்னை)

"மக்கள் மனதில் தேசிய ஒருமைப்பாட்டுணர்வு வலுப்படவேண்டும். எம்மதமும் சம்மதமே என்ற மனப்பாங்கும் உயர்ந்திட வேண்டும்" என்று பாரத துணை ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

இவ்வைபவத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி ஹண்டேயும் கலந்து கொண்டார்.

## வன்முறை நிலையால் கவலை கொள்கிறார் பாரத ஜனாதிபதி

(புதுடில்லி)

"நாட்டில் நிலவும் தற்போதைய வன்முறை நிலை வருத்தம் தருகிறது." பாரத ஜனாதிபதி திரு. ஆர் வெங்கட்ராமன் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

"பிரிவினை உணர்வு நீங்கி நாம் இந்தியர் என்ற ஒற்றுமை நிலையினை உருவாக்கவே இன்றைய இன்றியமையாத தேவை" என்றார் அவர்.

ஈழமுரசு

## எம். பீ. மாருக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்க வேண்டாம்!

பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை வழங்கும் அரசாங்கத்தின் முடிவை ஏற்றுக்கொள்வதில்லை என்றும், கடைசிவரை எதிர்ப்பதென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. எம். பீக்களுக்கு சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரத்தை வழங்குவதை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ள கட்சியின் மத்திய கமிட்டி, பாதுகாப்புப்படையினருக்கு நவீன ஆயுதங்களை வழங்கி, மேலதிக அதிகாரங்களையும் வழங்கி வன்செயல்களைத் தடுக்கமுடியுமெனவும் ஆலோசனை வழங்கியுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

# வடக்கு கிழக்கில் அமைதிப் பிரார்த்தனை நடத்த முயற்சி

நாட்டில் அமைதி வேண்டி இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸினால் ஜூன் இரண்டாம் மூன்றும் நாலாம் திகதிகளில் தினசரி காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறவிருக்கும் பிரார்த்தனைகளுக்கு இலங்கைத் தமிழர்ஆசிரியர்சங்கம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது. அத்துடன் இப்பிரார்த்தனை நடைபெறும் இடங்களில் உள்ள தமது ஆசிரிய சங்க நிர்வாகிகளையும், அங்கத்தவர்கள் அனைவரையும் இப்பிரார்த்தனைகளை ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகளில் தமது முழுமையான பங்களிப்பைச் செய்வதோடு பிரார்த்தனைகளிலும் முழுமையாகக் கலந்து கொள்ளுமாறும் சங்கத்தின் பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காந்திய வழியிலான இவ்வமைதியான பிரார்த்தனைக்கு, பூரண ஆதரவைத் தெரிவித்து, இ.தொ.க.வின் தலைவர் திரு. தொண்டமானுக்கும், பொதுச் செயலாளர் திரு. செல்லச்சாமிக்கும் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். இக்கடிதத்தில், பிரார்த்தனை நடைபெறும் இடங்களில் உள்ள இ. த. ஆ. சங்க நிர்வாகிகள், அங்கத்தவர்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறும் இ.தொ.கா. தலைவர்களை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர்கோரியுள்ளார்.

இவ்வகையிலான அமைதிப் பிரார்த்தனையை வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு விரைவில் விஸ்தரிப்பது தொடர்பாகவும், இ த.ஆ. சங்கம் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து ஆராயவிருக்கிறதெனவும் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## திங்கட்கிழமை சிங்கப்பூர் மலாயா பென்ஷன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மலாயா, சிங்கப்பூர் பென்ஷன் காரர்களுக்கான மே மாத ஒய்வூதியம் நாளை மறுதினம் 3ம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் செக் மூலம் வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதியின்....

—1ஆம் பக்கத் தொடர்

முடிவையும் சுதந்திரக் கட்சி எதிர்ப்பதன் மூலம் பிரச்சினைகள் உருவாகலாமென்று அரசாங்கம் அச்சமடைவதாக'' திரு. பண்டாரி திருமதி பண்டாரநாயக்காவிடம் கூறிய போதே அவர் இவ்வாறு பதிலளித்தாராம்.

''பொதுத் தேர்தல் மூலம் தனது ஆலோசனைக்கு ஜனாதிபதி அங்கீகாரம் பெறுவாரானால் தனக்கோ, தனது கட்சிக்கோ அவர் அச்சமடையத் தேவையில்லை'' என்றும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பொது மக்கள் அங்கீகாரத்தைப் பெறுவதை தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும், பொதுத் தேர்தல் மூலமே இதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஜனாதிபதி இன்று....

...1ஆம் பக்கத் தொடர்

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி, வெளிவிவகார சிரேஷ்ட ஆலோசகர் திரு. எஸ்மண்ட் விக்கிரமசிங்கா, வெளிவிவகார அமைச்சு அதிகாரி திரு. ஜெயந்த ராஜபக்ஷ, திருமதி. ஜெயவர்த்தன ஆகியோர் கூடச் செல்கின்றனர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை இரு தலைவர்களும் சந்தித்து பிரச்சினைகள் பற்றி உரையாடுவர்.

பாரதப் பிரதமருடன், அமைச்சர் குர்ஷித் ஆலம்கான், வெளியுறவுக் கொள்கைக் குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி ஆகியோர் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுவர்.

நாளை மாலை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும், பிரதமர் ராஜீவ் காந்தியும் ஒரே விமானத்தில் பங்களாதேஷ் சென்று புயலாலும், வெள்ளத்தாலும் பாதிப்புற்ற இடங்களைப் பார்வையிடுவதுடன், பங்களாதேஷ் ஜனாதிபதி இர்ஷாட்டையும் சந்தித்து தங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பர்.

### ஜனாதிபதி பயங்கர...

—1ஆம் பக்கத் தொடர்

மூலம் பயங்கரவாதத்தைஒழிப்பதற்காக நாடுகளிடையே ஆலோசனை, நிதி, ஆயுதம் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்ள முடியும் எனவும் கூறினார்.

# கிழக்கில் இரு மரணங்கள்; பெண்ணுக்குமரணதண்டனை

(மட்டுநகர்)

தாளங்குடாவில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற சம்பவமொன்றில் இரு இளைஞர் மரணமானதாகத் தெரிய வந்துள்ளது.

ஒருவர் சுடப்பட்டு மரணமானதாகவும், மற்றவர் சைனைட் குளிகை அருந்தி மரணமானதாகவும் தெரிய வந்துள்ளது.

மட்டுநகரில் நேற்று மூன்று பிள்ளைகளின் தாயான ஒருவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

முப்பத்தாறு வயதான இவர் 'காட்டிக்கொடுப்பவர்' என குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

### தமிழரை பலவந்த....

...1ஆம் பக்கத் தொடர்

தமிழ் அகதிகளை தற்காலிகமாக பிரிட்டனில் தங்க அனுமதிக்க வேண்டும் என கேட்டுள்ளார்.

### கொழும்பு பஸ்....

-1-ஆம் பக்கத் தொடர்

எட்டுமணியளவில் வரக்காப்பொலவில் பாதையை விட்டு விலகி பள்ளத்துள் பாய்ந்து சரிந்தது. ஆனாலும் பிரயாணிகள் எவரும் காயமடையவில்லை. வேறு பஸ்கள்மூலம் இவர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்.

### ராஜீவ் அழைப்பை....

...1ஆம் பக்கத் தொடர்

துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் இம்மாதக் கடைசியில் டில்லி சென்று அவரைச் சந்திக்க தாம் உத்தேசித்துள்ளதாகஅனுரா தெரிவித்தார்.

### 25 பரல் டீசல்

—1ஆம் பக்கத் தொடர்

ங்க அதிபரிடம் விசேஷ அனுமதி பெற்று, இராணுவ பர்மிட்டுடன் வவுனியாவிலிருந்து டீசலை எடுத்து வந்தபோதே இக் கொள்ளை இடம் பெற்றுள்ளது.

இதனால் வடபிரதேச போக்குவரத்துச் சபை தனது சகல பஸ் சேவைகளையும் இன்றுமுதல் காலவரையின்றி ரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# அன்றீஸ் கம்பனி

## நாலாயிரம் ஊழியர்கள்

## 03 - 06 - 1985

# உண்ணுவிரதம்

அன்றீஸ் கம்பனி வாகனங்கள் தொடர்ச்சியாக கடத்தப்பட்டு வருவதால் கம்பனி நிர்வாகம் கம்பனியை மூடிவிடத் தீர்மானித்துள்ளது, இதனால் வேலையிழக்கப் போகின்ற நாலாயிரம் தொழிலாளர்களாகிய நாம்

(1) எமது கம்பனி முன் நாவற்குழியிலும்
(2) குருநகர் தொழிலாளர்கள் குருநகரிலும்
(3) முல்லைத்தீவு தொழிலாளர்கள் முல்லைத்தீவிலும்

உண்ணுவிரதம் ஆரம்பிக்கின்றோம். நியாயமான தீர்வினை ஏற்படுத்த விரும்புவோர் உடன் எமக்கு நிவாரணம் அளிக்க வேண்டுகின்றோம்.

**அன்றீஸ் கம்பனி ஊழியர்கள்**

# ஓர் வேண்டுகோள்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் கடந்த சில தினங்களாக நடந்துவரும் கொள்ளைகளால் பாதிக்கப்படுபவர்கள் எமது ஊழியர்கள் என்ற காரணத்தால் மேற்படி கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஓர் மனிதாபிமான வேண்டுகோள் விடுக்கிறோம். வடபகுதியில் சிறப்பாக இயங்கி வரும் எமது தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள்; அடிக்கடி நிகழும் இப்படியான கொள்ளைகளால் நிர்வாகம் எமது தொழிற்சாலையை மூடும்படி உத்தரவிட்டால் பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளர்கள் மட்டுமல்ல, சிமெந்து கைத்தொழிலை நம்பியிருக்கும் பல்லாயிரக் கணக்கானோரும் ஆவார்.

கடந்த வாரம் எமது தொழிற்சாலை ஊழியர்கள் வதியும் வீடுகளுக்கு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்த ஓர் உழவு இயந்திரம் இல: 36/4084 ஓர் சிலரால், சாரதியை அடித்துத் துன்புறுத்தி அபகரிக்கப்பட்டது. இவ்வாரம் தொழிற்சாலையில் ஓர் பகுதியில் இருந்து வேறொரு பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த ஓர் உழவு இயந்திரம் இல: 36/6603 பெட்டியுடன் துப்பாக்கி முனையில் அபகரிக்கப்பட்டது.

இவைகள் எல்லாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏன்? விடுதலை விரும்பிகள் இவைகளைக் கண்டும் பாராமுகமாக இருப்பது ஏன்? இவைகளை சமூக விரோதச் செயலாகக் கருதவில்லையா? எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு கடந்த சில மாதங்களுக்கு முன் அபகரிக்கப்பட்ட உழவு இயந்திரம் இல: 36/6605 உட்பட அனைத்தையும் மீண்டும் எம்மிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மீண்டும் இப்படியான செயல்கள் இடம்பெறுமானால், பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் அல்லலுறும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் நிலை எமது சகோதரர்களுக்கும் ஏற்படலாமென நாமும் அஞ்சுகின்றோம்.

**ஊழியர் பேரவை,**
**காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை.**


தரமான

## தங்க - வைர நகைகளை

எண்ணம்போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

## நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் தாபனத்தாரால், 37, கண்டிவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 1-6-85 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23386.